17.08.2026

# பல்கலைக்கழக கிராஸ் கண்ட்ரி போட்டி புதுகை ஜெ.ஜெ. கல்லூரியில் நடைபெற்றது

பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான 10 கிலோ மீட்டர் தூரம் ஓடக்கூடிய ஆண்கள் மற்றும் பெண்கள் பங்குபெறும் கிராஸ் கண்ட்ரி போட்டியானது புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரியில் தொடங்கியது.

இப்போட்டியியில் பல்கலைக்கழக ஆளுமைக்கு உட்பட்ட 20-க்கும் மேற்பட்ட கல்லூரி அணியினர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கலந்து கொண்டனர்.

இப்போட்டியினை புதுக்கோட்டை மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் பிருந்தா அவர்கள் துவக்கி வைத்தார்.

போட்டிகளுக்கு ஜெ.ஜெ. கல்வி குழும செயலர் திரு.நா.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார் மற்றும் பல்கலைக்ழக உடற்கல்வி துறைத்தலைவர் முனைவர் A.பழனிசாமி, மாவட்ட உடற்கல்வி அலுவலர் திரு.R.தங்கராஜ், மாவட்ட விளையாட்டு அலுவலர், திரு.G.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் 6 வீரர்கள் அகில இந்திய கிராஸ் கண்ட்ரி போட்டியில் பல்கலைக்கழகத்தின் சார்பாக பங்கேற்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் ஆண்கள் பிரிவில் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி அணியினர் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்றனர். இரண்டாமிடத்தை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி (தன்னாட்சி) புதுக்கோட்டையும், மூன்று மற்றும் நான்காமிடத்தை பாரதிதாசன் பல்கலைக்கழகமும் திரு.வி.க.கல்லூரி, திருவாரூர் அணியினரும் பெற்றனர்.

பெண்கள் பிரிவில் மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி முதல் இடத்தையும், அன்னை மகளிர் கல்லூரி, கரூர் இரண்டாமிடத்தையும் பெற்றனர். மூன்று மற்றும் நான்காமிடத்தை முறையே ஹோலி கிராஸ் கல்லூரி, திருச்சி, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி அணியினரும் பெற்றனர்.

## 6 இடம் பிடித்த வீரர்கள் விபரம்

**பெண்கள் பிரிவில்,**

1. முதலிடம் - S.ஆர்த்தி, மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை
2. இரண்டாமிடம் - K.சுதா, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி
3. மூன்றாமிடம் - K.ஜனனி, மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை
4. நான்காமிடம் - L.சுவாதி, ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை
5. ஐந்தாமிடம் - K.மஞ்சுளா, ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை
6. ஆறாமிடம் - M.லத்திகா, மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை

**ஆண்கள் பிரிவில்,**

1. 104 - ஆர். தனுஷ்கோடி, செயின்ட் ஜோசப் கல்லூரி, திருச்சி
2. 109 - வி.விஸ்வா, செயின்ட் ஜோசப் கல்லூரி, திருச்சி
3. 130 - எஸ்.சந்தோஷ், மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை
4. 103 - என்.ஹரிஹரன், சுதர்ஸன் கலை அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை
5. 106 - எம்.முகேந்திரன், செயின்ட் ஜோசப் கல்லூரி, திருச்சி
6. 117 - என்.அஜய், மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை

பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், கல்லூரி முதல்வர் முனைவர். ஐ.பரசுராமன் கலந்துகொண்டு பரிசளித்து பாராட்டினார்.

போட்டிக்கான ஏற்பாட்டினை உடற்கல்வி துறைத்தலைவர் முனைவர் மு.ஜெகதீஸ் பாபு தலைமையில் செய்திருந்தனர்.